# மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலை

## *நாவன்மைப்போட்டி - 2014*

<u>போட்டி நடைபெறும் திகதி 09.03.2013 சனிக்கிழமை காலை 9.30 மணி</u>

<u>வயது எல்லைகள்</u>

1. 5 வயதிற்குட்பட்டோர் (31.08.2007 இற்குப் பின் பிறந்தோர்) - **அம்மா சுட்ட தோசை**
2. 5 - 6 வயது (01.09.2006 - 31.08.2007) - ஓடி விளையாடு பாப்பா
2. 6 - 7 வயது (01.09.2005 - 31.08.2006) - தமிழ்மொழி
3. 7 - 8 வயது (01.09.2004 - 31.08.2005) - சுத்தம் காப்போம்
4. 8 - 9 வயது (01.09.2003 - 31.08.2004) - இது பணிணிக்காலம்
5. 9 - 10 வயது (01.09.2002 - 31.08.2003) - சட்டத்தை மதிப்போம்
6. 10 - 12 வயது (01.09.2000 - 31.08.2002) - பகுத்தறிவு
7. 12 - 14 வயது (01.09.1998 - 31.08.2000) - நல்லவன் வாழ்வான்
8. 14 - 16 வயது (01.09.1996 - 31.08.1998) - நினைவாற்றல்
9. 16+ (01.09.1996 இற்கு முன் பிறந்தோர்) - பாராட்டுதல்
10. பெற்றோர் - **தரப்படும் தலையங்கத்தில் 5 நிடங்கள் பேசவேண்டும்.**

<u>நிபந்தனைகள்:-</u>

1. மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் மட்டுமே பங்கு கொள்ளலாம்.
2. மாணவர்கள் சரியான வயதெல்லைப் பிரிவில் பங்கு கொள்ள வேண்டும்.
3. பங்கு பற்றும் மாணவர்கள் கொடுக்கப்படுபனவற்றில் குறைந்தது 50 வீதமாவது கூறினால்தான் அவர்களுக்கு ஊக்குவிக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.
4. முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்குப் பரிசளிப்பு விழாவின்போது பரிசில்கள் வழங்கப்படும்.
5. இப்போட்டியில் பெறும் புள்ளிகள், வருட முடிவில் சிறந்த மாணவரைத் தேர்தெடுப்பதற்கான தேர்வில் சேர்த்துக் கொள்ளப்படும்.
6. போட்டிகள் காலை 09.30 மணிக்கு ஆரம்பமாகும்.
7. கீழே குறிப்பிட்டுள்ளபடியே புள்ளிகள் வழங்கப்படும்.
8. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
9. மாணவர்கள் தங்கள் பெயர்களை .02.03.2013 சனிக்கிழமைக்கு முன்பு தலைமை ஆசிரியரிடம் கொடுக்கவேண்டும்.
10. இவ்வருடம் இப்போட்டிகளில் பெற்றோர்களும் பங்குபற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கும் பரிசில்கள் உண்டு. பெற்றோர் கொடுக்கப்படும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்றைப் பற்றிப்பேசவேண்டும். அத்துடன் அவர்களுடைய பிள்ளைகளில் இல்லத்திற்கு புள்ளிகள் வழங்கி அதிக புள்ளிகள் பெறும் இல்லத்திற்கு பரிசளிப்பு விழாவில் வெற்றிக் கேடயம் வழங்கப்படும்.
11. மேலதிக உதவிகளை தலைமை ஆசிரியரிடம் அல்லது ஆளுநர்சபையினரிடம் பெற்றுக்கொள்ளலாம்..

நன்றி
தலைமை ஆசிரியர்

<u>போட்டி மதிப்பீட்டுப் புள்ளிகள்</u>

| | | |
|---|---|---|
| மனனம் | - | 30 |
| உச்சரிப்பு | - | 25 |
| தெளிவு | - | 25 |
| தொனி | - | 10 |
| பொருத்தமான உடல் அசைவு | - | 10 |

போட்டி நடைபெறும் திகதி 08.03.2014

## அம்மா சுட்ட தோசை

5 வயதிற்குட்பட்டோர் (31.08.2008 இற்குப் பின் பிறந்தோர்)

எல்லோருக்கும் எனது அன்பான வணக்கம்.
நான் இன்று “அம்மா சுட்ட தோசை” என்ற பாடலை பாடப்போகிறேன்.

அம்மா சுட்ட தோசை
தின்னத் தின்ன ஆசை
வட்ட வட்டத் தோசை
வயிறு நிறையும் தோசை

வெண்ணிலவுத் தோசை
வெண்ணெய் சேர்த்த தோசை
கண்ணிமைக்கும் நேரத்தில்
அம்மா சுட்ட தோசை

அரிசி சேர்த்த தோசை
அம்மா அன்புத் தோசை
முட்டை போட்ட தோசை
முறுக்கித் தின்னும் தோசை

அம்மா சுட்ட தோசை
தின்னத் தின்ன ஆசை

நன்றி
வணக்கம்.

ஆசிரியர் திரு.க.பிரேம்சங்கர்

<u>போட்டி நடைபெறும் திகதி 08.03.2014</u>

## <u>ஓடி விளையாடு பாப்பா</u>

5 - 6 வயது (01.09.2006 - 31.08.2007)

எல்லோருக்கும் எனது அன்பான வணக்கம்.
நான் இன்று “ஓடி விளையாடு பாப்பா” என்ற பாடலை பாடப்போகிறேன்.

ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

பாலைப் பொழிந்து தரும் பாப்பா – அந்தப்
பசு மிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்து வரும் நாய்தான் - அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா

காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு – என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா

நன்றி
வணக்கம்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

போட்டி நடைபெறும் திகதி 08.03.2014

## தமிழ் மொழி

6 - 7 வயது (01.09.2005 - 31.08.2006)

எல்லோருக்கும் எனது அன்பான வணக்கம்.
நான் இன்று "**தமிழ் மொழி**" பற்றி சில வார்த்தைகள் கூறப்போகிறேன்.

தமிழ்மொழி எங்கள் தாய்மொழி.

மூத்த மொழி எங்கள் தமிழ்மொழி.

இனிமைக்கு ஒரு மொழி இன்பத் தமிழ் மொழி.

இயல் இசை நாடகம் என்னும்

இளமை கொண்டது தமிழ் மொழி.

தத்துவம் சரித்திரம் எனப்பல

புத்தகம் தந்தது தமிழ்மொழி

அறம் பொருள் இன்பம் என்று

குறளால் அளந்தது தமிழ்மொழி.

இனிமை தருவது இன்பத் தமிழ்மொழி.

ஆழம் அகலம் கொண்டது

அழ்கிய எங்கள் தமிழ்மொழி.

தமிழின் வடிவே எங்கள் தாய்மொழியே

வாழ்க எங்கள் செம்மொழி

வாழ்க எங்கள் தமிழ்மொழி

நன்றி

வணக்கம்.

திரு.அமலன்

போட்டி நடைபெறும் திகதி 08.03.2014

## சுத்தம் காப்போம்

7 - 8 வயது (01.09.2004 - 31.08.2005)

இங்கு கூடியிருக்கும் அனைவருக்கும் எனது பணிவான வணக்கம்.
நான் இன்று உங்கள் முன்னால் பேச எடுத்துக்கொண்ட விடயம் "சுத்தம் காப்போம்"

சுத்தம் என்றால் என்ன? நாமும், நம்மைச் சூழ உள்ளனவும் அழுக்கில்லாமல் இருத்தல் ஆகும். நாம் என்று கூறும்போது எமது உடல், உடை, இருப்பிடச்சுத்தம், இதனுள் அடங்குகின்றன. ஒருவர் தினமும் குளித்து, தோய்ந்து உலர்ந்த ஆடை அணிந்து தலையிலிருந்து கால்வரை சுத்தமாக வைத்திருத்தல் அவசியம். அதைத்தவிர தான் இருக்கும் இடத்தையும், தான் செய்யும் ஒவ்வொரு காரியங்களிலும் சுத்தம் பேணுதல் அவசியமாகிறது.

கண்ணால் காணும் அழுக்கு மட்டுமல்ல, மனதில் தோன்றும் எண்ணங்களும் அழுக்கில்லாது இருத்தல் வேண்டும். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இவை யாவையுமே ஒருவகையில் மனதை மாசுபடுத்துபவையே. இவற்றை அகற்றி மனதை தூய்மைப்படுத்துவோம்.

ஒருவரிடம் நல்ல எண்ணங்கள் மனதில் தோன்றினால் அவரால் செய்யப்படும் எக்காரியமும் தூய்மையானதாகவே இருக்கும். உள்ளும் புறமும் ஒருவன் தூய்மையாக வைத்திருப்பான் எனின் அவன் செய்யும் காரியங்களும் தூய்மையானதாகவே அமைந்துவிடும். ஆதனால் நாம் ஒவ்வொருவரும் உள்ளும் புறமும் தூய்மையாக வைத்திருப்பதன் மூலம் எம்மையும், எம்மைச் சார்ந்தவற்றையும் சுத்தம் பேணி சுகாதாரத்துடனும், அழகுடனும், ஆரோக்கியத்துடனும் வாழ்வோமாக.

எனவே இன்றுமுதல் "சுத்தம் காப்போம் சுகம் பேணுவோம்" என்று கூறி உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

நன்றி
வணக்கம்.

ஆசிரியர் திருமதி. விஜி ஜோதிநாதன்

போட்டி நடைபெறும் திகதி 08.03.2014

## இது கணிணிக்காலம்

8 - 9 வயது (01.09.2003 - 31.08.2004)

எல்லோருக்கும் வணக்கம்.
இன்று நான் உங்கள் முன்னிலையில் பேச எடுத்துக்கொண்ட விடயம் "இது கணிணிக்காலம்"

சந்திரனில் மனிதன் கால் பதிப்பான் என்று யாரும் நினைத்ததில்லை. ஆனால் அது அன்று நடந்தேறியது. அதுபோன்று கைகளில் உலகை காட்டுவிக்கின்றனர் இன்றைய விஞ்ஞானிகள். அதுதான் இன்றைய கணிணிகள்.

பல கோடி காத தூரத்திற்கு அப்பால் இருக்கும் ஒருவருடன் தெலைபேசியில் முகம் பார்த்து பேசும் திறனும், போர் முனைகளில் துப்பாக்கி வேட்டுகளுக்கு நடுவே இருந்து நேரடி ஒலி, ஒளிபரப்புச் செய்யும் திறனையும் வளர்த்துவிட்டான் இன்றைய மனிதன்.

மரங்களிலே தாவித்திரிந்த மனிதன், இந்த உலகத்தை அசைவிக்கிறான். இன்று வீட்டின் நடுவே தொலைக்காட்சி என்றும், பட்டி தொட்டி எங்கும் மடிக்கணிணி வைத்துக் கல்வி கற்கிறான், கல்வி கற்பிக்கிறான். உள்ளங்கையளவு உடைய சிறிய கருவியின் மூலம் இயந்திரங்களை அசைவிக்கிறான்.

மாலுமி இல்லாத விமானம் எதிரியின் இலக்கைத் தாக்கி அழிக்கின்றது என்றால் சிந்தித்துப் பாருங்கள். எமது தமிழ் காவியமான இராமாயணத்தில் இராவணன் புட்பக விமானத்தில் பறந்தான் என்ற கதையை நனவாக்கிவிட்டான் இன்றைய விஞ்ஞானி.

வளரும் தாவரங்களுக்கு ஏற்ப அளவான நீரை கணிணியின் உதவியோடு சிறுசிறு குழாய்களின் மூலம் செயற்படுத்துகிறான் இந்த மனிதன். இன்னும் எத்தனை எத்தனையோ. இனறைய நவீன உலகத்தில் கணிணி இன்றி யாரும் இயங்க முடியாது என்ற "தலையங்கத்தை தாரை வார்த்துவிட்டான்" மனிதன்.

என் பேச்சைக்கேட்ட அனைவருக்கும் எனது

நன்றி
வணக்கம்.

ஆசிரியர் திரு.க.பிரேம்சங்கர்

போட்டி நடைபெறும் திகதி 08.03.2014

## சட்டத்தை மதிப்போம்

9 - 10 வயது (01.09.2002 - 31.08.2003)

எல்லோருக்கும் வணக்கம்.
இன்று நான் உங்கள் முன்னிலையில் பேச எடுத்துக்கொண்ட விடயம் "சட்டததை மதிப்போம்"

பண்டைய காலத்தில் மனிதன் கடவுளின் பெயரால் நியாயமாக வாழ எத்தனித்தான். பிற உயிர்களைக் கொன்று அவற்றின் உடலை உணவாக கொள்வதை தவிர்க்க படாத பாடுபட்டான். ஆனால் காலப்போக்கில் மற்றோரை வருத்தி தன் பசிக்காக புசிக்கத் தொடங்கினான். அதனால் மற்றைய உயிர்களை மதிக்கத் தவறினான்.

சுயநலம் அவன் வாழ்க்கை முடியும்வரை நீடித்தது. சிந்தித்தான்... மீண்டும் மீண்டும் சிந்தித்தான். முடிவு! பல மதங்களை உருவாக்கினான். முடிந்ததா பிரச்சனை? இல்லை. மீண்டும் எம்முள் பல பிரிவுகள் ஏற்பட்டன.

இவை அனைத்தையும் கருத்தில் கொண்ட புதிய மனிதன் சட்டத்தை உருவாக்கினான். சமூக வழக்கங்களாக இருந்த சிலவற்றை அடிப்படையாகக்கொண்டு சட்டத்தின் அத்திவாரத்தை உருவாக்கினான். மற்றோர் சுதந்திரத்தைப் பறிக்காமல், நாம் எவ்வாறு சுதந்திரமாக வாழலாம் என்பதன் தீர்வே சட்டமாகும். இவ்வாறு இன்று சட்டம் ஒரு சமுதாயத்தை மட்டுமல்ல ஒரு நாட்டையே எவ்வாறு நடத்தவேண்டும் என்று வரையறை செய்கின்றது.

ஒரு குழந்தை பிறந்ததிலிருந்து அது வளர்ந்து, வாழ்ந்து, இறக்கும்வரை அது சட்டத்தால் பாதுகாக்கப்படுகின்றது. அதுபோன்று நாமும் சட்டத்தை மதிக்கப்பழகவேண்டும். சட்டம் ஒரு கண்ணுக்குத் தெரியாத ஒப்பந்தம் என்பதை யாம் மறந்துவிடக்கூடாது. "சட்டம் ஓர் இருட்டறை" என்றார் அறிஞர் அண்ணா. அதை வெளிச்சத்திற்குக் கொண்டு வருபவனும் மனிதன்தான், இருட்டில் விடுபவனும் மனிதன்தான்.

எனவே நாம் வாழும் நாட்டின் சட்டங்களை மதித்து, மற்றையவர்களுக்கு எதுவித தீங்குகளும் செய்யாது இவ்வுலகிலே நல்லதொரு வாழ்வை வாழ்வோம் என்று கூறி என் பேச்சை நிறைவு செய்து கொள்கிறேன்.

நன்றி
வணக்கம்.

ஆசிரியர் திரு. க.பிரேம்சங்கர்

போட்டி நடைபெறும் திகதி 08.03.2014

## பகுத்தறிவு

10 - 12 வயது (01.09.2000 - 31.08.2002)

“பகுத்தறிவு வாதம்” என்றவுடன் அகமகிழ்வோரைக் காண்கிறோம். அஞ்சுவோரைக் காண்கிறோம். ஏற்போரைக் காண்கிறோம். எதிர்ப்பவர்களையும் காண்கிறோம், வாழ்த்துபவர்களையும் காண்கிறோம், வைபவர்களையும் காண்கிறோம். ஒரு சாரார் ஒருவிதமாகவும் இன்னொரு சாரார் இன்னொரு விதமாகவும் நோக்கும் விவாதத்தை மாணவர்களாகிய நாம் எவ்விதமாக நோக்குவது? வரவேற்போமா? வழியனுப்புவோமா? ஒவ்வொரு மாணவ மாணவியரும் இக்கேள்வியைத் தம்முள் எழுப்பி சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும் முடிவு காணவேண்டும்.

ஒரு விடயத்தின் முடிவை கண்மூடித்தனமாக எடுக்கமுடியாது. அவர் சொன்னார், இவர் சொன்னார் என அடுத்தவரின் அபிப்பிராய அடிப்படையில் எடுக்க முடியாது. எதையும் ஏன்? எதற்கு? என்று சிந்தித்தால் அறிவு வளரும். அறிவு வளர்ந்தால் வாழ்வும் வளமும் உண்டு.

பகுத்தறிவு என்பது மனிதரின் ஆறாம் அறிவு. அதனாலேயே ஔவையார் “ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது” என்றார். மனிதரென்றும், மிருகங்களென்றும், தாவரங்களென்றும் கூறும் பகுத்தறிவு மனிதர்கட்கு நற்குணங்களை, நல்லெண்ணங்களை, நவீன சாதனங்களை ஏன் நாகரீகத்தையே வழங்கியது எனலாம்.

பகுத்தறிவு என்பது பகுத்து அல்லது வகுத்து அறிதல் எனப்பொருள்படும். இதைத்தான் “குணம்நாடி குற்றமும்நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொள்ளும் நிலை” என்பர். இதையே திருவள்ளுவர் மிக அழகாக

“தேதற்ற யாரையும் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்” என்றார்.

தமிழுலகைப் பொறுத்தளவில் “பகுத்தறிவுவாதம்” ஒன்றும் புதியது அல்ல, பகுத்தறிவுக்கு ஒவ்வாத எதையும் தமிழுலகம் ஏற்கவில்லை. தமிழன் தன் நாகரீக எழிலுக்கும், ஏற்றத்திற்கும் பகுத்தறிவே காரணமாயிற்று.

புரட்சிக்கவிஞன் பாரதி கூறியதுபோல “செத்தபிறகு சிவலோகம் வைகுண்டம் சேர்ந்திடலாம் என்று எண்ணியிராது, ஆயிரம் தெய்வங்கள் உண்டு என தேடியலையாது, மாடனை, வேடனை, காடனைப் போற்றி மயங்காது, சாத்திரங்கள் பித்த மனிதப் பேயுரை எனத்தேர்ந்து, தெளிந்து, சுத்த அறிவே சிவனென அறிந்து பகுத்தறிவால் ஈடேறுவோமாக.”

நன்றி
வணக்கம்

திரு.பதஞ்சலி நவேந்திரன்

போட்டி நடைபெறும் திகதி 08.03.2014

## நல்லவன் வாழ்வான்

12 - 14 வயது (01.09.1998 - 31.08.2000)

யார் நல்லவன்? யார் பெரியவன்?
எல்லாவற்றையும் தனக்கென வைத்திருப்பனை பெரிய மனிதன் என்பது மேலைநாட்டில். எல்லாவற்றையும் விட்டவனை மட்டும்தான் பெரிய மனிதன் என்று கூறுவது இந்தியாவில்.

புத்தன் சித்தார்த்தனாக இருந்தபோது அவனுக்கு எந்தப் பிரச்சனையும் கிடையாது. "உளி விழுவது வலியென அழும் கற்கள் சிற்பம் ஆகா." அனுபவம் என்னும் வலி மீண்டும் மீண்டும் விழுந்து ஒருவன் சிற்பம் ஆவான்.

கார் மேகமும் ஆலையில் இருந்து வரும் புகையும் ஒரே நிறம்தான். ஆனால் கார்மேகம் மட்டும்தான் மழையாகி கீழே வந்து மண்ணை வளம்பெற செய்யமுடியும். நல்ல சிந்தனைகள் செயல்களாக மாறும், செயல்கள் பழக்கங்களாக மாறும், பழக்கங்கள் காலாச்சாரங்களாக மாறும், கலாச்சாரமே அடுத்த தலைமுறையைக் காப்பாற்றும்.

ஒரு மனிதனைப் பார்க்கும்போது இன்னொரு மனிதன் மனதில் நம்பிக்கை தோன்றவேண்டும்.
எல்லோராலும் நல்லவராக இருக்கமுடியும். ஆனால் சூழ்நிலை மாறும்போதுதான் நல்லவன் யார் கெட்டவன் யார் என்று அறிய முடியும். நல்ல மகான்கள் வாழ்ந்தது கற்பனை வார்த்தையாக இருக்கலாம் ஆனால் நல்லவர்கள் வாழ்வார்கள் என்பது உண்மை.

இதுவரை யாரும் நல்லவர்களாக வாழ முடியாவிட்டால் முயற்சி செய்ய வேண்டும். முயற்சி செய்து முடியாவிட்டால் அது வேறு. ஆனால் முயற்சி பண்ணவே முடியாவிட்டால் அது வேறு. எனவே தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும்.

நல்லவர்களுக்காக ஒன்றை மட்டும் சொல்கிறேன். "சூறாவளிகள் நட்சத்திரங்களை ஒன்றும் செய்வதில்லை" நாங்கள் உண்டு இல்லை என்று போராடலாம், வாதாடலாம். ஆனால் நல்லவர்கள் உங்களின் அனுமதி இன்றிக்கூட நல்லவர்களாக வாழ்கின்றனர்.

ஒரு பறவை வானத்தில் பறக்கும்போது நேர் கோட்டிலேதான் பறக்கிறது. ஆனால் அதன் நிழல்தான் கீழேயும் மேலேயும் வளைந்து வளைந்து செல்கிறது. அதற்காக நிழலைப்பார்த்துவிட்டு அது சாத்தியமில்லை என்று சொல்லக்கூடாது. நம் பார்வையை மேல் நோக்கி மாற்றிக்கொள்ளவேண்டும். எம்மால் நேர்கோட்டிலே போகமுடியும் அந்த நம்பிக்கையோடுதான் நாம் எல்லோரும் வாழவேண்டும். நல்லவர்களாக வாழவேண்டும்!

முல உரை :

எழுத்துருவாக்கம் மு.து.செல்வராஜா

போட்டி நடைபெறும் திகதி 08.03.2014

## நினைவாற்றல்

14 - 16 வயது (01.09.1996 - 31.08.1998)

அதிவேகமாக இயங்கிக் கொண்டிருக்கும் இந்த நவீன உலகிலே, வெற்றிபெற போட்டிகள் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றது. மேதைகளையும், விஞ்ஞானிகளையும், இலக்கியம் படைத்தோர்களையும், கல்விமான்களையும், மேதாவிகளையும், துறைசார் விற்பன்னர்களையும், கூர்ந்து நோக்கும் பொழுது நினைவாற்றலே இவர்களின் வெற்றியின் அடிப்படையாகும்.

நினைவாற்றல் எனப்படுவது ஒருவர் எந்த விடயத்தையும் அவதானித்தல், மூளையில் பதியவைத்தல், தேவவைப்படும் போது அதை வெளிக்கொணர்தல், ஆகிய பகுதிச் செயற்பாடுகளை கொண்டுள்ளது. கொடுக்கப்பட்ட ஒரு விடயம் தரப்பட்ட ஒரு தருணத்தில், தெரிந்திருந்தும் தெரியப்படாதிருத்தலும் ஒருவரின் நினைவாற்றலின் செயற்பாட்டுத் திறனின் அளவீடாகும்.

என்றுமே இயங்கிக் கொண்டிருக்கும் மூளை இடைவிடாது மாற்றம் கண்டவண்ணமே செயற்படுகின்றது. கணப்பொழுதின் தரவுகளை சேகரித்து பல ஆயிரம் மூளைக்கல தொடர்பு வழிகளுடாக வெளிச் செலுத்துவதோடு, வேண்டிய மாத்திரத்திலேயே ஞாபகத்திலிருந்து எடுத்துவரவும் எமது மூளையின் இயக்கத்தால் முடிகிறது. மனித மூளையின் செயற்பாடுகளை திட்டவட்டமாக தெரிந்து கொள்ளப்படாத, நிலையில் இதே மூளையின் சிந்தனைப்பரிமாணத்தில் கிடைத்த எந்தவொரு சக்தி வாய்ந்த கணனியையும் ஒப்பிட முடியாது.

சரித்திரம் படைத்த துறைசார் விற்பன்னர்கள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள், அறிஞர்கள், அவைருக்கும் அடிப்படையில் நினைவாற்றல் மிகவும் திறம்படவே செயற்பட்டிருந்தது. அவ்வளவு சக்தி வாய்ந்த நினைவாற்றலை நாமும் பெற்றுக் கொள்ள இன்றைய நாட்களில் சில எளிய முறைகள் இருக்கின்றன.

அன்று வெல்வது வேண்டி பாரதி, ‘சக்தி கொடு’ என கேட்டு நின்றது போன்று இன்று, வெற்றி வேண்டும் அனைவருக்கும் ‘ஞாபக சக்தி கொடு, அது கிடைக்கும் வல்லமை கொடு’ என சக்தி மாதாவை கேட்டு, எனது பேச்சை முடித்து கொள்கின்றேன்.

நன்றி

வணக்கம்

திரு.அமலன்

போட்டி நடைபெறும் திகதி  08.03.2014

## "பாராட்டுதல்"

16+ (01.09.1996 இற்கு முன் பிறந்தோர்)

பாராட்டுதல் என்பது மனித குணங்களில் உன்னதமானது! பாராட்டுபவர், பாராட்டப்படுபவர் இருவரின் நிலையையும் பாராட்டு உயர்த்தக் கூடியது!

பாராட்டுதல் பலவகைப்படும். ஒரு சிறிய புன்னகை மூலம் அங்கீகரிப்பது முதுகில் தட்டிக் கொடுப்பது கைகளைப் பிடித்துக் குலுக்குவது வார்த்தைகள் மூலம் முகத்துக்கு நேராகப் புகழுவது - மெச்சுவது இவை எல்லாமே பாராட்டின் பலவகைதானே!!
படிப்பதில் இடறிவிடும் மாணவன் பின் முயன்று முதலிடம் பெறுவதும் சோம்பல் கொண்ட ஊழியர் சுறுசுறுப்படைந்து பணியில் சிறப்பதும் பாராட்டின் சாதனையாகும்.

வெற்றியாளர்கள் எவரை எங்கு எப்போது பார்த்தாலும் தானாக முன்சென்று மனமுவந்து தாராளமாகப் பாராட்டுவார்கள்! இந்தப் பாராட்டுமொழி என்பது பல விந்தைகளைச் செய்து நம்மை வியக்க வைக்கிறது. ஆம்! சமூகத்தால் கவனிக்கப்படுகிறோம் என்பதையும் அங்கீகரிக்கப்படுகிறோம் என்ற எண்ணத்தையும் பாராட்டப்படுபவரின் மனதில் இது விதைத்து விடுகிறது. விளைவு? அவரது ஆற்றல்களும் திறமைகளும் மேன்மேலும் வளர்கிறது! தன்னம்பிக்கை தானே தழைக்கிறது!!

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஓயாமல் திட்டிக் கொண்டும், குறை கூறிக் கொண்டும் இருந்தால், அந்தப் பிள்ளைகளின் அறிவு வளர்ச்சி மழுங்கிப் போய்விடும். சில நேரங்களில் அவர்களை விரக்தி மனம் கொண்டவர்களாக மாற்றிவிடும். மாறாகப் பிள்ளைகளைப் பெற்றோர்கள் தட்டிக் கொடுத்து, அவர்கள் திறமையைப் பாராட்டிட வேண்டும். இடை இடையே அன்பு மொழிகளால் கண்டித்து வளர்த்தால், பிள்ளைகளின் மனதில் தன்னம்பிக்கை தானே துளிர்விடும்! சாதனைகள் செய்திடத் தூண்டுகோலாய் அப்பாராட்டு அமையும். என குழந்தை மருத்துவ நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

"பணம் செய்யாததைப் பாராட்டு செய்யும்" என்பது புதுமொழி. பாராட்டுகளைப் பெற்றவர்கள் மீண்டும் மீண்டும் பாராட்டைப் பெற வேண்டும் என்ற உந்துதலால் தங்கள் பணிகளை மேலும் சிறப்பாக செய்வார்கள்! இது நிர்வாக மேலாண்மைத் துறையினர் ஆய்வு செய்து கண்டுபிடித்துள்ள அப்பட்டமான உண்மை!

நமது குடும்பத்தினர், குழந்தைகள், நண்பர்கள், உடன் பணிபுரிவோர் என அனைத்து நிலையில் உள்ளவர்களையும் நாம் பாராட்டிப் பழகுவோம். மனித உறவுகளை மாண்புற வளரும்படி செய்வோம்

திரு.அமிர்தலிங்கம் நாகராஜா